සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

## இஸ்லாம் - ඉස්ලාම්

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி I**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களில் இறுதியானது.
   1) அல்லாஹ் 2) மலக்குகள் 3) கழா கத்ர் 4) மறுமை

2. தௌராத் வேதம் வழங்கப்பட்ட நபி.
   1) மூஸா (அலை) 2) ஈஸா (அலை)
   3) தாவூத் (அலை) 4) முஹம்மத் (ஸல்)

3. ஒளியினால் படைக்கப்பட்ட அல்லாஹ்வின் படைப்பினம்
   1) மனிதர்கள் 2) மலக்குகள் 3) ஜின்கள் 4) பறவைகள்

4. நரகின் அதிபதி
   1) ஜிப்ரீல் (அலை) 2) இஸ்ராபீல் (அலை)
   3) ரிழ்வான் (அலை) 4) மாலிக் (அலை)

5. கடுமையான நஜீஸிற்கு உதாரணம்
   1) பிராணிகளின் இறந்த உடல் 2) ஆணின் சிறுநீர்
   3) நாயின் உமிழ் நீர் 4) மதி

6. நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி அருளப்பட்ட இடம்
   1) தவ்ர் குகை 2) ஸபா மலை
   3) ஹிரா குகை 4) அரபா மலை

7. அல்லாஹ்வின் முஸ்தஹீலான ஸிபத்துக்களில் ஒன்று
   1) இல்முன் 2) அதமுன் 3) பஸீருன் 4) முதகல்லிமுன்

8. நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக அருளப்பட்ட ஸூரா
   1) ஸூரா அல் கத்ர் 2) ஸூரா அல் பகரா
   3) ஸூரா அல் அலக் 4) ஸூரா அர் ரஹ்மான்

9. நோன்பு கடமையாக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு
   1) ஹிஜ்ரி - 2 2) ஹிஜ்ரி - 3
   3) ஹிஜ்ரி - 4 4) ஹிஜ்ரி - 5

10. நோன்பு நோற்பதற்கு தடை செய்யப்பட்ட தினம் அல்லாதது
    1) அரபாவுடைய தினம் 2) பெருநாள் தினம்
    3) சந்தேகத்திற்குரிய தினம் 4) அய்யாமுத் தஷ்ரீக்

Education கல்வி අධ්‍යාපන

♦ **பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாமிடுக.**

11. இன்ஜீல் வேதம் தாவூத் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்டது. (.....)

12. நோன்பு நோற்கும் நேரம் இப்தார் எனப்படும். (.....)

13. மறுமையில் முதன் முதலில் தொழுகை பற்றியே விசாரணை செய்யப்படும். (.....)

14. பெருந்தொடக்கை நீக்குவதற்கு வுழு செய்ய வேண்டும். (.....)

15. நபி (ஸல்) அவர்களே இறுதி நபியாவார்கள் (.....)

♦ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து வெற்றிடங்களை நிரப்புக.**

| |
|---|
| ஈமான், மூஸா (அலை), கஸ்தூரி வியாபாரி, இ்.திகாப் ஜபீரத் |

16. வேதமும், ஸுஹுபுகளும் வழங்கப்பட்ட நபி ................................... அவர்கள் ஆவார்கள்.

17. உடல், உறுப்புகளில் காயம் ஏற்பட்டால் அதன் மேல் போடப்படும் கட்டு .................................. எனப்படும்.

18. ரமழானில் நபி (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும் மஸ்ஜிதில் ........................................... இருந்து வந்துள்ளனர்.

19. நல்ல நண்பனுக்கு உதாரணம் ......................................... ஆவார்.

20. வெட்க உணர்வில்லாதவனின் ................................. பூரணமற்றது.

(20x2=40 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி II

- முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

1. சுருக்கமான விடை தருக.
   1) அல்லாஹ்வுக்கு கட்டாயம் இருக்க வேண்டிய இரண்டு பண்புகளைக் குறிப்பிடுக.
   2) ''மலகுல்மவ்த்'' என அழைக்கப்படும் மலக்கு யார்?
   3) ''றிஸாலத்'' என்றால் என்ன?
   4) தயம்மத்தில் உட்படுத்தப்படும் இரண்டு உறுப்புகளும் எவை?
   5) நஜீஸின் இரண்டு வகைகளைக் குறிப்பிடுக.
   6) தொழுகை எச்சந்தர்ப்பதில் கடமையாக்கப்பட்டது?
   7) இஸ்லாத்தின் இரண்டாவது சட்ட மூலாதாரம் எது?
   8) ''லைலத்துல் கத்ர்'' இரவு எந்த மாதத்தில் உள்ளது?

(2x8=16 புள்ளி)

2. 1) ''ஈமான்'' என்றால் என்ன? (3 புள்ளி)
   2) ஈமானின் வகைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
   3) நாம் ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

3. 1) ''ஜனாபத்'' என்றால் என்ன? (3 புள்ளி)
   2) சுத்தமாக இருப்பதனால் ஏற்படும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
   3) ஜனாபத் உடையவர்கள் செய்யக் கூடாத நான்கு கருமங்களைத் தருக. (4 புள்ளி)

4. 1) இஸ்லாத்தின் இரண்டாவது கடமை எது? (3 புள்ளி)
   2) பிரார்த்தனையின் நிபந்தனைகள் இரண்டு தருக. (4 புள்ளி)
   3) தொழுகை மூலம் நாம் அடையும் பயன்கள் நான்கு தருக. (4 புள்ளி)

5. 1) ''திக்ர்'' என்றால் என்ன? (3 புள்ளி)
   2) திக்ரின் இரு வகைகளையும் குறிப்பிடுக. (4 புள்ளி)
   3) திக்ரின் மூலம் கிடைக்கும் பயன்கள் நான்கு தருக. (4 புள்ளி)

6. 1) ''ஸுஹுபு'' கள் என்றால் என்ன? (3 புள்ளி)
   2) வேதங்கள் வழங்கப்பட்ட நான்கு நபிமார்களின் பெயர்களையும் தருக. (4 புள்ளி)
   3) பிறர் வீட்டினுள் நுழையும் போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளை குறிப்பிடுக. (4 புள்ளி)

7. 1) அல் குர்ஆன் அருளப்பட்ட இரவு எவ்வாறு அழைக்கப்படுகின்றது? (3 புள்ளி)
   2) நபி (ஸல்) அவர்களால் லைலதுல் கத்ரில் ஓதுவதற்கு சிபாரிசு செய்ய்ப்பட்ட ''துஆ''வை எழுதுக. (3 புள்ளி)
   3) லைலத்துல் கத்ர் இரவில் நாம் கடைபிடிக்க வேண்டிய நற்செயல்கள் நான்கினை குறிப்பிடுக. (4 புள்ளி)

Education கல்வி அධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT
## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page